யிருக்கிறது. இவைகளைத் தவிர்க்க ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அல்லது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் இவர்கள் மூலமாக வழங்கப்படுகின்றனவா ? அல்லது சரிவர நடவடிக்கை எடுக்க தனி அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நலத்துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக அவை வினியோகிக்கப்படுகின்றன. அவர்கள் மாதாமாதம் சென்று ஒழுங்காக நடத்தப்படுகிறதா, உண்மை யிலேயே வழங்கப்பட்ட மிஷின்கள் மூலம் தொழில் செய்கிறார்களா என்பதைக் கண்காணித்துத்தான் வருகிறார்கள்.

Coaching centres for competitive examinations

* 105 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to increase the coaching centres for Scheduled Castes and Scheduled Tribes candidates seeking competitive examinations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, பல மாவட்டங்களிலே போட்டிப் பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குச் சலுகை தரப்படாமல் இருப்பதால் மாவட்ட வாரியாக ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது குரூப் 4—ஜூனியர் அசிஸ்டென்ட்ஸ் என்ற சர்வீசிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டந்தோறும் புதிய பயிற்சி நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது 20 இடங்களில், ஒவ்வொரு நிலையத்திலும் 50 மாணவர்கள் விதம் 1,000 மாணவர்களுக்கு 1 ஆண்டுக்குப் பயிற்சி தரும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

ஏழை உழவர்களுக்கு நிலம்

*** 106 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் விவசாயத்திற்கு அரை ஏக்கர் நிலமும், வீடு கட்ட ஐந்து சென்டு இடமும் இலவசமாக வழங்கிட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா ?